**35வது தேசிய கவுன்சிலில் விவாதிக்கப்பட வேண்டிய ஆய்படு பொருட்களாக ஊழியர் தரப்பு செயலாளர் தோழர் P.அபிமன்யு தொகுத்து வழங்கியுள்ள பிரச்சனைகள்**

01) ஒப்பந்த ஊழியர் பிரச்சனைகளை அங்கீகரிக்கப்பட்ட சங்கம் உடபட யாருடனும் விவாதிக்கக் கூடாது என்கிற கார்ப்பரேட் அலுவலக 21.10.2016 தேதியிட்ட கடித எண்: BSNL/39-10/SR/2008ஐ உடனடியாக திரும்ப பெறுவது மற்றும் ஒப்பந்த ஊழியர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம், ESI மற்றும் EPF ஆகியவற்றை அமல்படுத்துவதை கண்காணிக்க கார்ப்பரேட் அலுவலகத்தில் ஒரு தனிப்பிரிவு துவங்க வேண்டும்.

02) டெலிகாம் டெக்னீசியன் மற்றும் ஜூனியர் என்ஜினியர் இலாகா தேர்வுகள் எழுதுவதற்கான தகுதி அளவீடுகளை ஒரு கட்ட முயற்சியாக தளர்த்த வேண்டும்.

03) லக்னோ மத்திய நிர்வாக தீர்ப்பாயத்தின் 05.05.2016 தேதியிட்ட தீர்ப்பின் அடிப்படையில், சீனியர் அக்கவுண்டண்ட்களுக்கு அதிகாரி அந்தஸ்த்து வழங்கி E1A ஊதிய விகிதமும் வழங்க வேண்டும்.

04) 22.07.1997 முதல் 03.10.2000 வரை முடிவு அறிவிக்கப்பட்ட பதவி உயர்வு தேர்வுகளில் SC/ST ஊழியர்களின் தகுதி மதிப்பெண்களில் தளர்வு வழங்கப்பட வேண்டும்.

05) SC/ST ஊழியர்களின் தகுதி மதிப்பெண்களில் தளர்வு வழங்குவதில் DoP&Tயின் உத்தரவுகளை அமலாக்குவதில் BSNL நிர்வாகத்திற்கு உள்ள தயக்கம் களையப்பட்டு நியாயம் வழங்க வேண்டும்.

06) TTA RR 2014ன்படி 2015ஆம் ஆண்டில் நடைபெற்ற TTA LICE தேர்வு முடிவுகளை தளர்த்தப்பட்ட அளவீடுகளின் படி மறு பரிசீலனை செய்ய வேண்டும்.

07) BSNLல் இணைக்கப்பட்ட DOT ஊழியர்களுக்கு 01.01.2016 முதல் மாற்றப்பட்ட பணிக்கொடை உச்ச வரம்பை அமல்படுத்தப்பட வேண்டும்.

08) தேக்க நிலை பிரச்சனையில் RLCCயின் வழிகாட்டுதல்படி 11.01.2016ல் நடைபெற்ற பேச்சு வார்த்தையில் நிர்வாகம் கொடுத்த உத்தரவாதத்தை அமல்படுத்த வேண்டும்.

09) தேக்க நிலையை தவிர்க்க 01.01.2017 முதல் ஏற்பட உள்ள ஊதிய மாற்றத்தில் முடிவில்லா ஊதிய விகிதத்தை அமல்படுத்த வேண்டும்.

10) அனைத்து தவறுகளையும், பாரபட்சங்களையும் நீக்கி NEPP திட்டத்தை அமல்படுத்த வேண்டும்.

11) அதிகப்படியாக வழங்கிய ஊதியத்தை பிடித்தம் செய்யக்கூடாது என்கிற உச்ச நீதிமன்ற உத்தரவை அமல்படுத்த வேண்டும்.

12) BSNL CDA விதிகளில் ஊழியர்களை அரசியல் நடவடிக்கைகளில் இருந்து தடைசெய்யும் பிரிவுகளை நீக்க வேண்டும்.

13) இலாகா தேர்வுகளில், கல்வி தகுதி, வயது, ஊதிய நிலையில் குறைந்த பட்சம் இருக்க வேண்டிய காலம் உள்ளிட்ட தகுதிக்கான அளவீடுகளை தளர்த்திட வேண்டும்.

14) காசுவல் ஊழியர்களின் ஊதியத்தை மாற்றிட வேண்டும்.

15) ஒப்பந்த ஊழியர்களின் ஊதியத்தை உயர்த்திட வேண்டும்.

16) ஜூனியர் அக்கவுண்டண்ட்களுக்கு சீனியர் அக்கவுண்டண்ட்களாக பதவி உயர்வு வழங்கிட வேண்டும்.